Government Engineering College, Salem

*236 Q.—Thiru L. BALARAMAN (on behalf of Thiru V. Isvarmurti): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the causes that led to the indefinite closure of Government Engineering College, Salem, in Augest 1973; and

(b) the action taken thereon?

சேலம், அரசினர் பொறியியல் கல்லூரி

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973 ஆகஸ்ட் திங்களில், சேலம், அரசினர் பொறியியல் கல்லூரியை காலவரையறையின்றி மூடியதற்கான காரணங்கள் யாவை?

(இ) அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இரண்டு முதுநிலை வகுப்பு மாணவர்கள் வேறு ஒரு இளநிலை வகுப்பு மாணவர்களுக்கு இடர் விளைவிக்கும் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டமையால் கல்லூரி முதல்வர் அவ்விரு முதுநிலை வகுப்பு மாணவர்களுக்கும் கல்லூரி மாறுவதற்குரிய சான்றிதழ்களை வழங்கினர். கல்லூரி முதல்வரின் இச்செய்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகத்தான் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. போதிய அறிவுரைகளுக்கும் வேண்டுதலுக்குப் பின்னரும் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. ஆதலால் கல்லூரி காலவரையறையின்றி 20—8—73 முதல் மூடப்பட்டது. 27—8—1973 அன்று கல்லூரி திறக்கப்பட்டு தற்போது சரிவா இயங்குகிறது.

திரு. எல். பலராமன்: இம்மாதிரி கல்லூரிகளில் முதலாவது ஆண்டிலே சேரக்கூடிய பிள்ளைகளை முன்னால் சேர்ந்த பிள்ளைகள் ஒரு அருவருக்கத்தக்க முறையில் கேலியும் கிண்டலும் செய்வதை சட்ட ரீதியாகத் தடுப்பதற்கு அரசு ஏதாவது முயற்சிக்கிறதா? இதுபோன்ற முயற்சியை எடுத்தால்தான், சில அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட முடியும் என்பதை அரசு உணர்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எல்லாக் கல்லூரிகளிலும், பொதுவாக பொறியியல் கல்லூரி போன்றவற்றிலெல்லாம் கல்லூரி முதல்வர்கள், விடுதி காப்பாளர்கள் ஆகியோர் முன்கூட்டியே, ராகிங்

1974 மார்ச் 28]

நிகழ்ச்சி ஏற்பட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்கிருர்கள். ராகிங் செய்தால் கல்லூரிகளிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று சொல்கிருர்கள். இருந்தாலும் சிலவிடங்களிலே மன்றமுகமாக நடக்கிறது. ஓரளவுக்கு இது தடுக்கப்பட்டிருக்கிறது. சிலவிடங்களிலே மறைமுகமாக நடத்தியதை அங்கேயுள்ள காவலாளி தெரிவித்துவிட்டார் என்பதற்காக அந்தக் காவலாளியை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்றும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். இதையெல்லாம் விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் விசாரணை செய்து, இரண்டு மாணவர்களுக்கு டி.சி. கொடுத்து அனுப்பினுர்கள். அதற்குப் பிறகுதான் இந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள். கல்லூரி முதல்வர் இணங்கி வரவில்லை. அவர்களும், அவர்களுடைய தாய் தந்தையர்களும் மன்னிப்பு எழுதிக் கொடுத்து, இனிமேல் இதுமாதிரிக் காரியங்களில் ஈடுபடமாட்டேன் என்று உத்தரவாதம் கொடுப்பார்களேயானுல், சேர்த்துக் கொள்வோம் என்ருர்கள். மாணவர்கள் முதலில் மறுத்தார்கள். பிறகு கல்லூரி திறக்க ஆரம்பித்த பிறகு, இருவரும் தாய் தந்தையரின் ஒப்புதலோடு எழுதிக்கொடுத்து வந்ததற்குப் பிறகு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இப்படிப்பட்ட எச்சரிக்கை அடிப்படையில் அது நடைபெருமல் இருந்தது.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, மாணவர்கள் இந்த ராகிங் முறையில் எப்படி எப்படி நடத்தப்படுகிருர்கள் என்று அரசுக்குத் தெரியுமா? இது நடக்கவே கூடாது என்று தவிர்க்க அரசு சட்டமியற்ற ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ராகிங் முறைகளைச் சொல்வதற்கில்லை. மிகக் கேவலமான முறையிலும், மிக அசிங்கமான வகையிலும் நடத்துகிருர்கள். ஏற்கெனவே ஐந்தாறு ஆண்டுக் காலத்திற்கு முன்னுல் இரண்டு மூன்று மாணவர்களை கல்லூரியிலிருந்தே டிஸ்மிஸ் செய்து அனுப்பியிருக்கிருேம். கிண்டியிலே இதுமாதிரிச் செய்திருக்கிருேம். அதற்குப் பிறகு ஓரளவிற்கு இது தணிந்திருக்கிறது. இந்த இடத்தைப் பொறுத்த வரையில், இரண்டு பேரையும் குனியச் சொல்லி, அவர்கள் கன்னத்திலே அறைந்து, தலைமயிரைப் பிடித்து இழுத்து, அவர்களுடைய சட்டையிலுள்ள பொத்தான்களை கழற்றச் சொல்லி அந்தப் பொத்தான்களை அந்த மாணவர்களை விட்டே தின்னச் சொல்லி இப்படியெல்லாம் கொடுமைப்படுத்தியிருக்கிருர்கள். இதைவிட இன்னும் அசிங்கமான, அவமானப்படுத்துகின்ற முறையிலேயெல்லாம்கூட நடத்துகிருர்கள். அவர்களைப் பொறுத்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று முன்கூட்டியே விடுதி அறிக்கைப் பலகையில் போட வேண்டுமென்று இப்போது கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்கள்.